1975 மார்ச் 24]

அரிசன, பின்தங்கிய மாணவர்களின் உணவு இல்லங்கள்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரிசன, பின்தங்கிய மாணவர்களின் உணவு இல்லங்களுக்கு நியாய விலையில் உணவு தானியங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், எத்தனை இல்லங்களுக்கு அவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரிசன, பின்தங்கிய மாணவர் இல்லங்களுக்கும், அரசு இருப்பிலிருந்து, பொது விநியோக முறை விலையில், அரிசி விநியோகம் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொறுப்பு மாவட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

Notification of Pudukkottai District as a Backward District

* 179 *Q.*—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Government have requested the Central Government to notify Pudukkottai District as a Backward District ; and

(*b*) if so, the reply given thereon by the Central Government?

புதுக்கோட்டை மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டம் என அறிவித்தல்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டம் என அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) புதுக்கோட்டை மாவட்டத்தை தொழில் துறையில் பிற்பட்ட மாவட்டம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

Charges for Government Advertisements

* 180 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the amount paid to the various newspapers in the State for publication of Government advertisements during the financial year 1969–70 and 1970–71; and

(b) the basis on which such advertisements are given to newspapers?

அரசு விளம்பரங்களுக்காக கொடுக்கப்பட்ட செலவுத் தொகைகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1969-70, 1970-71 நிதியாண்டுகளில் அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்கு இம் மாநிலத்தில் பல்வேறு செய்தித்தாள்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எந்த அடிப்படையில் அத்தகைய விளம்பரங்கள் செய்தித் தாள்களுக்குக் கொடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 1969–70. 1970-71

(ரூபாய் இலட்சத்தில்)

1969–70	1970-71
*21.22	30.13

(*கிராம வளர்ச்சி இயக்குநர் ஆகியவை குறித்த விளம்பரம் செய்வதற்கான செலவு இதில் அடங்காது.)

(ஆ) பத்திரிகைகளின் விற்பனை அளவு அவற்றின் சார்பு அவற்றில் அடங்கியுள்ள பொருள்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. எந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்கையில் குறிப்பிட்ட ஒரு விளம்பரம் எந்தப் பகுதிக்கு அல்லது எந்த வகை வாசகர்களுக்கு வெளியிடப்படுகிறது என்பதும் கருத்திற் கொள்ளப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டில் இந்த அரசாங்கத்தினுடைய விளம்பரங்கள், அதுவும் மாநில அளவிலே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றவைகள் எல்லாம், தமிழரசு பத்திரிகை மூலமாகவே கொடுக்கப்படும் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது. அதற்கு மாறாக எல்லா பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த மாறுதல் எப்போது எடுக்கப்பட்டது, எதற்காக எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, 1971–ல் ஏப்ரல் திங்களில் செய்தி விளம்பரத் துறை சில செயல் முறைகளை ஆய்வு செய்தது. அதே நேரத்தில்தான் முக்கியத்துவம் வாய்ந்த சில ஒப்பந்தப் புள்ளிகள், ஏல அறிவிப்புகள், அறிவிப்புகள் குறித்த விளம்பரங்கள் காரணமாகத்தான் அரசுக்கு அதிகமான செலவு ஏற்பட்டது என்பதை

1975 மார்ச் 24]

அறிந்த பிறகு, ஏல ஒப்பந்தங்கள், அறிவிப்புகள் ஆகியவைகளுக்கான வற்றை தமிழரசு பத்திரிகையில் மட்டும் வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டு, அவைகள் அந்தப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப் பட்டுள்ளன. மாநில அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விளம் பரங்கள் மற்ற செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மேல் சபையில் முன்பு கேட்கப்பட்டிருக்கிறது. 1967–68ல் ரூ. 4·67 லட்சம், 1968–69ல் ரூ. 7·38 லட்சம் என்ற அளவிலே விளம்பரம் கொடுக்கப் பட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதிலிலிருந்து 1970–71ல் ரூ. 30 லட்சம் கொடுக்கப்பட்டது என்று தெரிகிறது. கிட்டத்தட்ட 7 அல்லது 8 மடங்குக்கு மேலாக இந்த விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த விளம்பரங்கள் கூடுதலாக அரசாங்கத்திலே செய்யப்படுகின்றன? என்ன காரியங்களுக் காகச் செய்யப்படுகின்றன? அதனாலே விளைகிற பலன் என்ன என்பதை அமைச்சர் கூறவேண்டும். அத்துடன் 1972–73, 1973–74, 1974–75லே செய்யப்பட்ட செலவுகளை அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, 1969–70, அதற்கும் முன்பான ஆண்டுகளில் செலவிட்ட தொகையைவிட இப்போது கூடுதலாக என் ஆகியது என்பதற்குக் காரணம் செய்தித்தாள்களில் அதிகமான விளம்பரக் கட்டணங்கள்தான். அதற்குப் பிறகு 1973–74 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே கிடையாது. 2 ஆண்டுகளுக்கு மட்டுமே கேட்டார்கள். அந்த 2 ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்களை மட்டும் நான் சொல்லியிருக்கின்றேன்.

அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற பல்வேறு திட்டங்கள், பல்வேறு சாதனைகள், பல்வேறு வாரியங்களின் வளர்ச்சிப் பணிகள் இத்தனை யையும் மக்களுக்கு அறிவிக்கின்ற வகையில் இத்தகைய காரியங்கள் செய்யப்பட்டுள்ளன.

Total Annual Income of the Temple at 'ANBIL' Village

* 181 *Q.*—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the total annual income of the temple at 'ANBIL' Village in Tiruchirappalli district which comes under 'Arulmigu Aranganathaswami Devasthanam, Srirangam; and

(*b*) whether any guest house facilities are made available there to the pilgrims?